இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 15-02-2024


# மீனவர் உயிர் மலிவா?

“பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் ஒரு மீனவர் கூட பாதிக்கப்பட மாட்டார்கள்” - என்று 2014 தேர்தலுக்கு முன்னால் ராமநாதபுரத்தில் பேசினார் பிரதமர் வேட்பாளர் நரேந்திரமோடி. ஆனால் அவர் ஆண்ட பத்தாண்டு காலத்தில் இலங்கைக் கடற்படையினரால் 3 ஆயிரத்து 76 மீனவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்களின் 534 படகுகள் சிங்கள அரசாங்கத்தால் கடத்தப்பட்டுள்ளன.

**“அண்டை நாடுகள் இப்படி நடந்து கொள்ளக் காரணம், இந்தியாவை பலவீனமான பிரதமர் ஆள்வதால்தான்” - என்று அன்றைய பிரதமர் மன்மோகன்சிங்கை குற்றம் சாட்டினார் பிரதமர் வேட்பாளர் நரேந்திரமோடி அவர்கள். அவரது பத்தாண்டு கால ஆட்சியிலும் நிலைமை மாறவில்லை. இலங்கை சிறையில் மட்டுமல்ல, 3.12.2023 அன்று பாகிஸ்தான் அதிகாரிகளாலும் தமிழ்நாட்டு மீனவர்கள் சிலர் சிறைப்பிடிக்கப்பட்டு உள்ளார்கள். 5.12.2023 அன்று குவைத் கடலோரக் காவல் படையினராலும் தமிழ்நாட்டு மீனவர்கள் நான்கு பேர் சிறைப்பிடிக்கப்பட்டு உள்ளார்கள். ‘பலமான’ பிரதமர் ஆட்சியில் இருக்கும் போதுதான் இது நடந்துள்ளது. பிரதமர் மோடியை பலவீனமானவர் என்று சொல்ல முடியாது. அவர் பலமானவர்தான். ஆனால் அவருக்கு தமிழ்நாட்டவர் மீது துளி அக்கறையும் இல்லை என்பதுதான் இதற்குக் காரணம். தமிழ்நாட்டுக்காரர்களுக்கு ஒரு திருக்குறளைச் சொன்னால் மயங்கி விடுவார்கள். தமிழில் ‘வணக்கம்’ சொன்னால் கைதட்டி விடுவார்கள். காசி சங்கமம் போதும் என்று நினைக்கிறது பா.ஜ.க.**

“இலங்கையால் தமிழ்நாட்டு மீனவர்க்கு பிரச்சினை. பாகிஸ்தானால் குஜராத் மீனவர்க்கு பிரச்சினை. இரண்டையும் தீர்க்க கூட்டு முயற்சியை மேற்கொள்வேன்” என்றும் பிரதமர் வேட்பாளராக இருந்த போது மோடி சொன்னார். பத்தாண்டுகள் ஆகிவிட்டன. இரண்டு முறை ஆண்டு விட்டார். கூட்டு முயற்சி மட்டுமல்ல, எந்த முயற்சியும் இல்லை. ‘எய்ம்ஸ்’ மருத்துவமனை மாதிரிதான் மீனவர் கூட்டுமுயற்சியும் ‘தொடங்கப்படாமலேயே பத்தாண்டு விழாவை’க் கொண்டாட வேண்டிய விவகாரமாக ஆகிவிட்டது.

**2021 ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சிக்கு வந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்த இரண்டரை ஆண்டு காலத்தில் பிரதமருக்கு ஒன்பது கடிதங்கள் எழுதி இருக்கிறார். எந்தப் பயனும் இல்லை. ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு 35 கடிதங்கள் எழுதி இருக்கிறார். எந்தப் பயனும் இல்லை. கடலில் போட்ட கல்லாகக் கிடக்கிறது.**

அதிலும் குறிப்பாக 2023 ஆம் ஆண்டு என்பது தமிழக மீனவர்களுக்கு மிக மோசமான ஆண்டு ஆகும். அந்த ஆண்டு மட்டும், இலங்கைக் கடற்படையினர் 243 மீனவர்களைக் கைது செய்துள்ளார்கள். 37 படகுகளை பறிமுதல் செய்துள்ளார்கள்.

கடந்த ஒரு மாதம் இன்னும் நிலைமை மோசம் ஆனது. 6 கைது சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. அதில் 88 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். 12 மீன்பிடிப் படகுகள் சிறைப் பிடிக்கப்பட்டுள்ளன. கடந்த பிப் 8 ஆம் தேதி அன்று 19 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். உடனடியாக பிரதமருக்கு கடிதம் எழுதினார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். நாடாளுமன்றம் நடந்து கொண்டிருந்தது. அங்கும் தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு இப்பிரச்சினையை எழுப்பினார்.

இலங்கை சிறையில் இப்போது 77 மீனவர்கள் சிறைப்பட்டு இருக்கிறார்கள். அவர்களது 151 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டு அங்கு இருக்கின்றன. மீனவர்களை விடுதலை செய்யவோ, பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை விடுவிக்கவோ ஒன்றிய பா.ஜ.க. அரசு எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையின் அட்டூழியத்தை வேடிக்கை பார்க்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து கடந்த 11 ஆம் தேதியன்று இராமேஸ்வரத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை தி.மு.க. நடத்தி இருக்கிறது. கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் நடைபெற்ற இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பத்துக்கும் மேற்பட்ட தென் மாவட்டக் கழக அமைப்பைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டுள்ளார்கள். “தமிழர்களைச் சுட்டும், கைது செய்யும் இலங்கை அரசாங்கத்துக்கு 34 ஆயிரம் கோடியைக் கொடுக்கும் பா.ஜ.க. அரசு, நமது வரிப்பணத்தை தூக்கித் தரும் பா.ஜ.க. அரசு, அதே இலங்கை அரசால் தமிழக மீனவர்கள் தாக்கப்படும் போது தடுக்க வேண்டாமா?” என்று கேட்டுள்ளார் ஆர்.எஸ்.பாரதி.

கோவிட் பெருந்தொற்று காலம் தவிர, மற்ற காலங்களில் தமிழ்நாட்டு மீனவர்கள், இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுவதும், கைது செய்யப்படுவதும் அதிகரித்தே வருகிறது. மீனவர்களை அடிப்பது, தாக்குவது, கைது செய்வது, சிறையில் அடைப்பது, படகுகளை உடைப்பது, படகுகளை பறிமுதல் செய்வது, மீன்பிடி வலைகளை அறுப்பது - ஆகிய அட்டூழியங்கள் தொடர்ந்து வருகிறது.

கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 9 ஆம் தேதி ஒன்றிய அமைச்சர் எல்.முருகன், ‘தமிழக மீனவர்கள் பற்றி பேசப் போகிறோம்’ என்று சொல்லிவிட்டு இலங்கை சென்றார். போய்விட்டு வந்தவர், ‘சர்வதேச கடல் எல்லைக்கு வரும் மீனவர்கள் குறித்து பேசினோம்’ என்று பேட்டி அளித்தார். இந்தப் பேட்டி கொடுத்த நாள் 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி 13. அதற்கு பத்து நாள் கழித்து 6 மீனவர்கள் தாக்கப்பட்டார்கள். இது தான் பா.ஜ.க.வின் நாடகம் ஆகும்.

**‘மீனவர் பிரச்சினையை தீர்த்துவிட்டோம்’ என்று பிரதமரும், உள்துறை அமைச்சரும் சென்னை கூட்டங்களில் பேசினார்கள். ஆனால் கைது தொடர்கிறது. பறிமுதலும் தொடர்கிறது. பா.ஜ.க.வின் போலி நாடகங்களும் தொடர்கிறது. மீனவர்களின் கண்ணீர் மட்டும் ஓடிக் கொண்டே இருக்கிறது.**

## முதல்வரின் சந்திப்பிற்குப் பின் ஜாக்டோ - ஜியோ போராட்டத்தை திரும்பப் பெற்றனர்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (14.2.2024) தலைமைச் செயலகத்தில், ஜாக்டோ – ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் மு.அன்பரசு, கு.தியாகராஜன், மு.வெங்கடேசன், நேரு, தியோடர் ராபின்சன், இரா. தாஸ், பொன்னிவளவன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர். முதல்வர் அவர்களின் சந்திப்பிற்கு பின் ஜாக்டோ – ஜியோ நிர்வாகிகள் போராட்டத்தை திரும்பப் பெற்றனர். பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் உடனிருந்தனர்.

# இன்று உரிமை முழக்கம்! நாளை வெற்றி முழக்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்! முதல் பக்கத் தொடர்ச்சி...

ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட 6 சட்டமன்றத் தொகுதிகளைச் சார்ந்த மாவட்ட - மாநகர - பகுதி - ஒன்றிய - நகர பேரூர்க் கழக நிர்வாகிகள், சார்பு அணியினர், பி.எல்.ஏ -2, பி.எல்.சி. ஒருங்கிணைப்பாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள் கலந்துகொள்ளும் வகையில் இந்தப் பொதுக்கூட்டங்கள் அமைந்திட வேண்டும்.

கழகத்தின் மகளிரணி, மகளிர் தொண்டரணி மற்றும் பூத் கமிட்டிகளில் உள்ள பெண் நிர்வாகிகள் பங்கேற்கக் கூடிய வகையில் போதுமான இட வசதிகளும், உரிய பாதுகாப்பும் அமைத்துத் தரப்படவேண்டும். ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் நியமிக்கப்பட்டுள்ள தொகுதிப் பார்வையாளர்கள் அவரவர் தொகுதிக்குட்பட்ட பூத் கமிட்டியினர் கலந்துகொள்வதை உறுதிசெய்து, கண்காணித்திட வேண்டும். மாவட்டக் கழகச் செயலாளர்களும் பொறுப்பு அமைச்சர்களும் அவரவர் நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த அனைத்து நிர்வாகிகளையும் ஒருங்கிணைத்து, சரியான முறையில் திட்டமிட்டு, கழக உடன்பிறப்புகளுடன் பெருந்திரளான பொதுமக்களும் கலந்துகொள்ளும் வகையில் இந்தப் பொதுக்கூட்டங்கள் அமைந்திட வேண்டும்.

மேடை அமைப்பு, விளம்பரங்கள், ஒலி-ஒளி அமைப்பு, இருக்கை வசதிகள், குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகள் ஆகியவை குறித்து தலைமைக் கழகம் ஏற்கனவே அறிவுறுத்தியுள்ளதை மனதிற்கொண்டு, கட்டுக்கோப்பான முறையில் கூட்டத்தை நடத்தி, மக்களின் மனதில் நம்பிக்கையை விதைத்து, அவர்களின் பேராதரவுடன் வெற்றியை அறுவடை செய்வதற்கு ஆயத்தமாக வேண்டும். இரண்டரை ஆண்டுகால திராவிட மாடல் அரசின் அடுக்கடுக்கான சாதனைகளையும், பத்தாண்டுகால பா.ஜ.க. ஆட்சியின் தொடர்ச்சியான துரோகங்களையும் - மோசடிகளையும் துண்டறிக்கைகளாக அச்சிட்டு வீடு வீடாகச் சென்று மக்களிடம் வழங்கி, பொதுக்கூட்டத்திற்கு அழைக்கும் பணியைப் பல தொகுதிகளிலும் மேற்கொண்டிருப்பதை அறிகிறேன்.

அதுபோல வாய்ப்புள்ள வகையில் எல்லாம் உரிய முறையில் விளம்பரங்களும் செய்யப்படுகின்றன. மற்றவர்களும் இத்தகைய பணிகளைச் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும்.

**எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வியூகம் குறித்து கழகத்தினருக்குப் பயிற்சி தரும் வகையிலும், பொதுமக்களுக்கு பா.ஜ.க. - அ.தி.மு.க. மறைமுகக் கூட்டாளிகளின் நேரடித் துரோகங்களை அம்பலப்படுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் ‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்’ அமைந்திட வேண்டும். அதுதான், பாசிசத்தை வீழ்த்தி, ‘இந்தியா’ வென்றிடுவதற்கான களத்தை அமைத்துத் தரும்.**

2022-ஆம் ஆண்டு விருதுநகரில் நடைபெற்ற முப்பெரும் விழாவில், ‘நாற்பதும் நமதே.. நாடும் நமதே’ என்ற முழக்கத்தை முன்வைத்தேன். அது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, 2023-இல் இந்திய ஒன்றியம் முழுவதும் பரவி, இந்தியா கூட்டணிக்கு வழிவகுத்துள்ளது. இன்றைய நம் உரிமை முழக்கமே நாளைய வெற்றி முழக்கமாக அமைந்திடும். நாடாளுமன்றத் தொகுதிகளுக்கான பொதுக் கூட்டங்கள் சிறப்பாக அமையட்டும். உரிமையின் குரல் ஓங்கி ஒலிக்கட்டும்! வெற்றி முழக்கம் திசையெட்டும் தெறிக்கட்டும்!

அன்புடன்
**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2055,
மாசி 02
14.02.2024.

## தமிழ்நாட்டில் 8 ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் இடமாற்றம்!

*சென்னை,பிப்.15-*

*தமிழ்நாட்டில் 8 ஐ.ஏ.எஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. தமிழக அரசு நிர்வாக காரணங்களுக்காக அவ்வப்போது துறை வாரியாக அதிரடி மாற்றங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், அரசுத்துறைகளில் பணியாற்றும் ஐ.ஏ.எஸ், ஐபிஎஸ் அதிகாரிகள் அவ்வப்போது பணியிட மாற்றம் செய்யப்படுவது வழக்கமான ஒன்றுதான். அந்த வகையில், தமிழ்நாடு முழுவதும் 6 மாவட்ட ஆட்சியர் உள்பட 14 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டனர். இந்த நிலையில், தற்போது 8 ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தமிழக அரசு அறிவித்துள்ளது. இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள உத்தரவில், ‘மாநில மனித உரிமைகள் ஆணைய செயலாளராக ஏ. சுகந்தி ஐ.ஏ.எஸ் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.*

*அதேபோல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை மற்றும் உள்துறை இணைச் செயலாளராக எஸ்.பி. அம்ரித் நியமனம் செய்யப்பட்டுள்ளார். மேலும், வணிகவரித்துறை இணை ஆணையராக (நிர்வாகம்) பி. ரத்தினசாமி ஐ.ஏ.எஸ், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று இணை மேலாண் இயக்குநராக ஆனந்த் மோகன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இதனிடையே, நாகர்கோவில் மாநகராட்சி ஆணையராக நிஷாந்த் கிருஷ்ணா ஐ.ஏ.எஸ் நியமிக்கப்பட்டுள்ளார். திருச்சி மாநகராட்சி ஆணையராக வி. சரவணன் ஐ.ஏ.எஸ் நியமிக்கப்பட்டுள்ளார். சென்னை பெருநகர மாநகராட்சி கூடுதல் ஆணையராக (சுகாதாரம்) வி. ஜெயச்சந்திர பானு ரெட்டி நியமிக்கப்பட்டுள்ளார். ராமநாதபுரம் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மற்றும் திட்ட அதிகாரியாக வீர்பிரதாப் சிங் நியமிக்கப்பட்டுள்ளார்’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*


